1975 நவம்பர் 4]

ஏற்படுகிறது. எனவே, அவ்வாறு உபயோகப்படுத்தாமல் இருக்கும் வகையில் அதைத் தடுப்பதற்கான வழி இருந்தால் அவ்வாறு செய்வது சௌகரியமாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இது நாரிலிருந்து கயிறு திரிப்பது. இதில் கொடுத்துள்ள விவரப்படி, இப்பொழுது தமிழ்நாட்டில் 35 தென்னை நார் ஆலைகளும் சேர்ந்து திங்கள் ஒன்றுக்கு 400 டன் நார் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும் என்று கொடுத்திருக்கிறார்கள். மின்சாரப் பற்றுக்குறை நீங்கும்பொழுது திங்கள் ஒன்றுக்கு 800 டன்கள் உற்பத்தி செய்ய முடியும். அங்கிருந்து தேங்காய் மட்டை நார் வர வேண்டிய நிலை இருக்கிறது.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, கேரளாவிலிருந்து தென்னை மட்டை நார் இங்கே வராததால் கயிற்றுத் தொழில் பாதிக்கப்படுகிறது என்பதை அரசு ஒத்துக் கொள்கிறது. அதே நேரத்தில் நம் நாட்டில் உற்பத்தியாகும் தேங்காய் வெளிநாட்டிற்கு, வடநாடுகளுக்கு இலட்சோப லட்சம் அளவிற்குப் போகிறது. முன்பு உரித்த தேங்காய்களாகப் போனது, இப்பொழுது உரியாத தேங்காய்களாகப் போகின்றன. எனவே, இனிமேல் உரித்த தேங்காய்களாகத்தான் போக வேண்டுமென்று செய்தால் அதன்மூலம் தொழிலாளர்களை வாழ வைக்க முடியும். இனியாவது அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தேங்காயிலிருந்து நார் உரிப்பது ரொம்பக் கஷ்டமான வேலை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது நல்ல கருத்து என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

Export of onion from Nagapattinam.

*174 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether onion export from Nagapattinam has been suspended from November, December 1974; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (a) & (b) சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் செய்யப்படும் வெங்காய ஏற்றுமதி புதுடில்லியிலுள்ள தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் National Agricultural Co-operative Marketing Federation மூலமாகச் செய்யப்பட வேண்டும் என உடனடியாக முறைப்படுத்தும் வகையில் புதுடில்லியிலுள்ள இந்திய அரசின் வணிக அமைச்சகம் 16—11—1974 நாளிட்ட 40/ITC 74 எண் உள்ள பொது அறிவிப்பின்கீழ் அறிவிப்பு வெளியிட்டது. இவ்வாறு முறைப்படுத்தும் ஆணை நாகப்பட்டினம், சென்னை ஆகிய இடங்களிலுள்ள ஏற்றுமதியாளர்களைப் பாதித்தது; 1974 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்கள்களில் நாகப்பட்டினம் துறைமுகம்மூலமாக வெங்காய ஏற்றுமதி செய்வது நின்று விட்டது.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister what is the quantum of onion which is expected to be exported to other nations ? Is there any attempt to grow more onion in the State ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I have no particulars about the quantity that is exported from Tamil Nadu to other countries. The export came almost to a dead stop and immediately after the issue of the Public Notice, 20 members who were actually exporters from the Onion Traders' Association, Madras and the Indian Chamber of Commerce and Industry filed a Writ Petition in the High Court at Madras and obtained a Stay Order on 19th December 1974. As a result of the Stay Order, the shipping bills were continued to be passed by the Joint Chief Controller of Imports and Exports, Madras, in the same manner as it was before the canalisation. So, at any stage the order was not allowed to be given effect to.

(முற்பகல் 9-30)

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு ஒரு கிலோ வெங்காயம் இரண்டு ரூபாய் அளவுக்குச் சந்தைகளில் விற்க ஆரம்பித்ததன் காரணமாக கூழுக்கு வெங்காயத்தைத் தொட்டுக்கொண்டு குடிக்கக்கூடிய ஏழைகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தனக்குப்

1975 நவம்பர் 4]

போகத்தான் தனயனுக்கு என்ற பழமொழிக்கேற்ப, இந்த ஆண்டு வெங்காயத்தை ஏற்றுமதி செய்யாது இருக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் வெங்காயம் அதிகமாகச் சாப்பிடுகிறார் என்று தெரிய வருகிறது.

திருமதி. ஜோதி வெங்கடாசலம்: அயல் நாடுகளில் இருந்து டி-ஹைட்ரேடட் வெங்காயத்தை அனுப்ப வேண்டுமென்று வந்து அதன் பேரில் சவுத் இந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் மூலமாக ஏதாவது ரெப்ரசன்டேஷன் வந்ததா?

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது பற்றிய தகவல் ஒன்றும் என்னிடத்தில் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தெற்கு ஜில்லாக்களில் விவசாயம் செய்யக்கூடிய வெங்காயத்தை வியாபாரிகள் பல வருஷங்களாக சிலோன், சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கெல்லாம் அனுப்பிக் கொண்டு வந்தார்கள். எனக்குப் பதிலிலிருந்து தெளிவாக விளங்கவில்லை. இப்போது அது நின்று போய்விட்டதா அல்லது தொடர்ந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய சர்க்கார் சொன்னது—வெங்காய ஏற்றுமதி நேஷனல் அக்ரிகல்சுரல் கோவாப்பரேட்டிவ் மார்க்கட்டிங் பெடரேஷன் மூலமாக அனுப்ப வேண்டுமென்று. அப்படி உத்தரவு வந்தவுடன் ஹைகோர்ட்டில் ஸ்டே வாங்கியிருப்பதால் அந்த உத்தரவு அமலுக்கு வரவில்லை. வெளிநாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டுத்தான் வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி: ஏற்றுமதி செய்யப்படுவது பெரிய வெங்காயமா, சிறிய வெங்காயமா? எது அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்றுமதி செய்கிற அதிகாரம் மத்திய சர்க்காருக்குத்தான் இருக்கிறது. எந்த வெங்காயம் என்று எனக்குத் தெரியவில்லை.